**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT, ERANIEL**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )
**CC.No. 49/2022 D.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ராஜ்குமார்** | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. ராஜையன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 28.04.2026.**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆவேன். நான் Brilliya Education Charitable Trust என்ற நிறுவனத்தினை துவங்கி அதில் தலைவராக இருந்து வருகிறேன். 10.08.2021ம் தேதி புகார்தாரரின் வீட்டிற்கு சென்று நான் 7 லட்சம் ரூபாய் வாங்கியதாக இவ்வழக்கில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யாகும்.

2. எனக்கு புகார்தாரரின் விவரங்கள், வீடு மற்றும் அவரது கடை எங்குள்ளது என்பது குறித்து எனக்குத் தெரியாது. நான் 2014 –2015 காலக்கட்டத்தில் புகார்தாரர் எனது கல்வி நிறுவனத்திற்கு வந்து செல்வது வழக்கம். அதனடிப்படையில் எனக்கு அவர் பழக்கமானார். ஆனால் நான் அவரிடம் இருந்து எந்த தொகையும் கடனாக வாங்கியதில்லை.

3. நான எனது பணி சம்மந்தமாக வெளியூர் செல்வதால் எனது கல்வி நிறுவன அலுவலக பணிக்காக எனது காசோலைகளில் கையொப்பம் செய்து வைப்பது வழக்கம். அதில் நான் கையொப்பம் செய்த காசோலை எண் 37 என முடியும் காசோலையை புகார்தாரர் திருடி 09.02.2022ம் தேதியன்று வங்கியில் தாக்கல் செய்து காசோலையானது திருப்பப்பட்டுள்ளது. மேற்படி விவரம் எனக்கு புகார்தாரர் தரப்பிலிருந்து வழக்கறிப்பு அனுப்பிய பிறகு தான் நான் தெரிந்துக் கொண்டேன்.

4. மேலும் காசோலை திருப்பப்பட்டதை குறித்து எனக்கு வங்கியிலிருந்து தகவல் கொடுத்தார்கள். மேலும் **எனது கல்வி நிறுவனத்தின் சிட்டி யூனியன் வங்கியின் Account Statement–யை (01.04.2015 முதல் 30.06.2022 வரை) இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அது Ex.D1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

5. புகார்தாரர் எனது நிறுவனத்திற்கு வரும் பொழுது எனது காசோலையை திருடி தவறாக வங்கியில் பயன்படுத்தி பொய்யான சங்கதிகள் கூறி என் மீது இந்நீதிமன்றத்தில் பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்து குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.